# வாக்குமூலம்

## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.

## OS.No.66/2014

## வழக்கு சாட்சி PW. 1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **ராம் மோகன்** | தொழில் | : வயது முதிர்வின் காரணமாக வேலைக்குச் செல்லவில்லை |
| தகப்பனார் பெயர் | : மதன கோபால் | கணவர் பெயர் | : ----- |
| கிராமம் | : சென்னை | இனம் | : ஆண் |
| தாலுகா | : சென்னை | வயது | : 77/2026 |
| மாவட்டம் | : சென்னை | நாள் | : 12.03.2026 |

**முதல் விசாரணை :**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். கடந்த 17.02.2026 ம் தேதி எனது தரப்பு சாட்சியமாக நான் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதன் தொடர்ச்சியாக கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்கிறேன்.

1. எனது பெயரிலும், எனது தாயார் பெயரிலும் தாவா சொத்து தொடர்பாக வழங்கப்பட்ட பட்டாவின் நகல் **வா.சா.ஆ.1** ஆகும்.

2. எனது பெயரிலும், எனது தாயார் பெயரிலும் தாவா சொத்து தொடர்பாக வழங்கப்பட்ட அடங்கல் நகல் **வா.சா.ஆ.2** ஆகும்.

3. தாவா சொத்து தொடர்பாக கொடைக்கானல் வட்டாச்சியர் அவர்களின் நடவடிக்கையின் நகல் **வா.சா.ஆ.3** ஆகும்.

4. தாவா சொத்து தொடர்பாக எனது பெயரிலும், எனது தாயார் பெயரிலும் செலுத்தப்பட்ட கிஸ்தி இரசீதுகள் (எண்ணம் 5) நகல் **வா.சா.ஆ.4** ஆகும்.

5. தாவா சொத்து தொடர்பாக எழுதப்பட்ட தொடர்பாக 29.04.2009 ம் தேதி எழுதப்பட்ட விடுதலைப் பத்திரம் நகல் **வா.சா.ஆ.5** ஆகும்.

6. தாவா சொத்து தொடர்பாக இதே பிரதிவாதி மீது இதற்கு முன்பு தாக்கல் செய்த அசல் வழக்கு 166/2009 ன் வாதுரையின் நகல் **வா.சா.ஆ.6** ஆகும்.

7. இதே வழக்கு தொடர்புடைய பிரதிவாதி , என் மீது தாக்கல் செய்த அசல் வழக்கு 16/2010 என்ற வழக்கின் வாதி தாக்கல் செய்த வாதுரை நகல் **வா.சா.ஆ.7** ஆகும்.

8. பட்டா மாறுதல் தொடர்பாக ஆட்சேபனை செய்து , நான் தாக்கல் செய்த நீதிபேராணை வழக்கு உத்தரவு நகல் **வா.சா.ஆ.8** ஆகும்.

9. நீதிபேராணை வழக்கு WP.(MD). No. 5959 of 2010 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.9** ஆகும்.

10. தாவா சொத்து தொடர்புடைய வில்லங்கச்சான்று அசல் **வா.சா.ஆ.10** ஆகும்.

11. 10.12.2012 தேதியிட்ட கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.11** ஆகும்.

12. 10.12.2012 தேதியிட்ட கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.12** ஆகும்.

**(தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்)**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இந்த வழக்கின் வாதி நான்தான் என்றால் சரிதான் . பிரதிவாதிகளால் ஏற்படுத்தப்பட்ட போலி ஆவணங்கள் மூலம் எனது உரிமை பாதிப்படைய கூடாது என்றுச் சொல்லி தடையுறுத்துக்கட்டளை கோரியும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகள் ஏற்படுத்திய ஆவணம் போலி ஆவணம் என்றுக் காட்டக்கூடிய ஆவணம் ஏதேனும் தாக்கல்

செய்துள்ளேனா என்றால் எனது தரப்பு ஆவணங்களாக அதை குறியீடு செய்துள்ளேன், அந்த ஆவணம் வா.சா.ஆ.11 மற்றும் வா.சா.ஆ.12 ஆவணங்கள் ஆகும். தாவா சொத்து எனது அப்பாவிற்கு பாகப்பிரிவினை மூலம் கிடைக்கப்பெற்ற சொத்து என்றால் 1.05 ஏக்கர்ஸ் எனது அப்பாவிற்கு பாகப்பிரிவினை அடிப்படையில் 25.03.1960 ல் சீர்காலி சார்பதிவாளர் அலுவலக ஆவணம் 1951/1960 ஆவணத்தின் அடிப்படையில் கிடைக்கப்பெற்றது. தாவா சொத்தின் பழைய சர்வே எண். 25/15/5 ஆகும். 1951/1960 ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

சர்வே எண்கள்.25/15 9A2 சென்ட் 6 நிலமும், .25/15 9B சென்ட் 39 சென்ட், ஆக மொத்தம் 45 சென்ட் நிலம் ராதாகிருஷ்ணன் நாயுடுக்கு சொந்தமான நிலம் என்றால் சரிதான். ராதாகிருஷ்ணன் நாயுடு மேற்சொன்ன சொத்தை 1938 ல் கிரையம் வாங்கினார்கள் என்றால் சரிதான். அவர் பெயரில் பட்டா எண்.217 எனத் தாக்கல் ஆகி இருந்தது என்றால் சரிதான். மேற்சொன்ன நிலம் எனது நிலத்திற்கு பக்கத்து நிலம் என்றால் சரிதான். அந்த பக்கத்து நிலத்தை ராதாகிருஷ்ணன் நாயுடு, எனது அப்பாவிற்கு வாய்மொழி செட்டில்மென்ட்டாக கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். எந்த தேதி, வருடம் எனது அப்பாவிற்கு வாய்மொழி மாற்றாக்கத்தன் அடிப்படையில் கொடுக்கப்பட்டது என்றால் தேதி குறிப்பிட்டு நினைவில்லை, ஆனால் 1961 ல் மே மாதம் போல் இடத்தை வாய்க்காரலாக கொடுத்துவிட்டார். வாய்மொழியாக கொடுக்கப்பட்ட கொடை நிலம் எப்போது என் தந்தை பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் மேற்கொள்ளப்பட்டது என்றால் 1961 லேயே பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1961 தொடர்புடைய என் அப்பா பெயர் உள்ள பட்டா ஆவணம் ஏதேனும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் எனது தரப்பு ஆவணங்களில் என் அப்பா பெயரில் உள்ள பட்டா ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் வா .சா.ஆ.1 UDR பட்டா என்றால் சரிதான். எதன் அடிப்படையில் வா .சா.ஆ.1 UDR பட்டா வழங்கப்பட்டது என்றால் எனது அப்பாவின் வாரிசு என்ற அடிப்படையில் வழங்கப்பட்டது . பட்டா எனக்கு வழங்கப்பட்ட காலகட்டத்தில் ராதாகிருஷ்ணன் நாயுடு மற்றும் அவரது வாரிசுகளுக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பபட்டதா என்றால் எனது அப்பா பெயரில் இருந்த பட்டா எனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டது. வாய்மொழிக் கொடையின் அடிப்படையில் கிடைக்கப்பெற்ற சொத்து தொடர்பாக ராதாகிருஷ்ணன் நாயுடு மற்றும் அவரது வாரிசுகள் மீது விளம்புகை பரிகாரம் கோரி ஏதேனும் வழக்கு என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை . 1 ஏக்கர் 5 சென்ட் நிலம் தான் எனது அப்பாவிற்கு கிடைக்கப்பெற்று, பிறகு எனக்கு கிடைக்கப்பெற்றது என்றாலும் UDR பட்டாவின் அடிப்படையில் 1 ஏக்கர் 50 சென்ட் நிலத்திற்கு தவறாக என் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

எனது பெயரில் இருந்த 45 சென்ட் நிலம் தொடர்புடைய பட்டாவானது வருவாய்த்துறையில் 2ம் பிரதிவாதி வாணிஸ்ரீ மனு தொடுத்ததன்பேரில் அது இரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான், ஆனால் எனக்கு அது தொடர்புடைய அறிவிப்பு அனுப்பப்படவில்லை. பட்டா இரத்து செய்யப்பட்டது தொடர்பாக நீதிபேராணை வழக்கு தொடுக்கப்பட்டது என்றால் சரிதான் . நீதிபேராணை வழக்கில் பட்டா இரத்து உத்தரவை தள்ளுப்படி செய்துவிட்டார்கள். 2009 ல் 2ம் பிரதிவாதி வாணிஸ்ரீ கொடுத்த மற்றொரு மனுவின் அடிப்படையில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு மீண்டும் வாணிஸ்ரீ பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான் . 2வதாக வாணிஸ்ரீ பெயரில் பட்டா வழங்கப்பட்டபோது நீதிபேராணை வழக்கில் உத்தரவிற்கிணங்க முறையாக விசாராணை மேற்கொண்டு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். 2009 காலம் முதல் 2ம் பிரதிவாதி வாணிஸ்ரீ தான் 45 சென்ட் நிலத்தில் அனுபவத்தில்

உள்ளார் என்றால் சரியல்ல . 2009 காலகட்டம் முதல் செட் அமைப்பை ஏற்படுத்தி அதற்கு மின்வாரியத்துறை இணைப்பு பெற்றும், நிலவரி செலுத்தியும் அவர் அனுபவத்தில வைத்து வருகிறார் என்றால் சரிதான், ஆனால் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்.

அசல் வழக்கு எண்.166/2009 என்ற வழக்கில் வாணிஸ்ரீ 45 சென்ட் நிலத்தில் அனுபவத்தில் உள்ளதாக நான் ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல , ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகத்தான் சொல்லியுள்ளேன். முறையாக எழுத்துரு ஆவணம் ஏற்படுத்தப்படாமல் ஒரு சொத்திற்கு உரிமை கொண்டாட முடியாது என்றால் (சாட்சி கேட்ட கேள்விக்கு எந்த பதிலும் அளிக்கவில்லை ). எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.5 விடுதலைப் பத்திரத்தில் 45 சென்ட் நிலம் எங்களுக்கு எப்படி கிடைக்கப்பெற்றது என்ற விபரம் அதில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான் . 1 ஏக்கர் 5 சென்ட் நிலம்தான் என் தந்தைக்கு பாகப்பிரிவினை அடிப்படையில் கிடைக்கப்பெற்றது என்றாலும் , 45 சென்ட் நிலத்திற்கு தவறாக UDR பட்டா பெற்று வா.சா.ஆ.5 ஆவணம் ஏற்படுத்தி அதன் அடிப்படையில் 1 ஏக்கர் 50 சென்ட் நிலத்திற்கு உரிமை கொண்டாடுகிறேன் என்றால் சரியல்ல . நான் 2009 காலம் முதல் 45 சென்ட் நிலம் எனது உடைமையில் இல்லை என்றால் சரியல்ல.

அசல் வழக்கு எண்.166/2009 என்ற வழக்கு நான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான் . அது தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்த வழக்காகும். அந்த வழக்கில் நான் விளம்புகை பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் கோரியுள்ளேன் . வா.சா.ஆ.6 ஆவணம், அசல் வழக்கு 166/2009 ன் வாதுரை என்றால் சரிதான் , அதில் விளம்புகை பரிகாரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை . அசல் வழக்கு எண்.16/2010 என்ற வழக்கு வாணிஸ்ரீ, என் மீது தாக்கல் செய்த வழக்கு என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.166/2009 ல்

இடைக்கால தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி நான் இடைக்கால மனு 255/2009 ஒன்று தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த இடைக்கால மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான் . அந்த இடைக்கால மனு தள்ளுபடி செய்யப்பட்டது தொடர்பாக பழனி சார்பு நீதிமன்றத்தில் CMA.No.25/2009 என்ற மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த CMA.No.25/2009 என்ற மனுவும் 14.10.2011 ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான் . என்னிடம் காட்டப்படும் உத்தரவு தான் CMA.No.25/2009 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு என்றால் சரிதான். அந்த ஆவணம் **பி.வா.சா.ஆ.1** ஆகும். அந்த CMA.No.25/2009 தள்ளுபடி செய்யப்பட்டதன் மேல் மேல்முறையீடு செய்யப்பட்டதா என்றால் CRP ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. அந்த CRP எண் ஆவணங்களை பார்வையிட்டால்தான் சொல்ல இயலும். நான் எந்தவித சீராய்வும் மேலெடுத்து செல்லவில்லை என்றாலும் , இந்த வழக்கிற்காக அவ்வாறு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

அசல் வழக்கு 166/2009 மற்றும் அசல் வழக்கு 16/2010 ஆகிய இரண்டு வழக்குகளும் ஒரு சேர நடத்தப்பட்டது என்றால் சரிதான். எனது அசல் வழக்கு 166/2009 31.07.2015 ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான் . என்னிடம் காட்டப்படும் தீர்ப்பு தான் அசல் வழக்கு 166/2009 வழக்கின் தீர்ப்புரை என்றால் சரிதான். அந்த ஆவணம் **பி.வா.சா.ஆ.2** ஆகும். நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எனது நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 13 ல் " அசல் வழக்கு 166/2009 ல் எனது தரப்பு தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் . அசல் வழக்கு எண்.16/2010 ல் பிரதிவாதி வாணிஸ்ரீ சார்பாக தீர்ப்பானது என்றால் சரியல்ல. அசல் வழக்கு 16/2010 முழுவதுமாக இருதரப்பும் தோன்றி நடைபெற்று இறுதியில் வாணிஸ்ரீ சார்பாக தீர்ப்பு வழங்கப்பட்டது என்றாலும் , அதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

அசல் வழக்கு 166/2009 தொடர்பாக மேல்முறையீட்டு வழக்கு எண் .50/2015 ம், அசல் வழக்கு 16/2010 தொடர்பாக மேல்முறையீட்டு வழக்கு எண் .49/2015 என்ற இரண்டு மேல்முறையீட்டு வழக்குகளை நான்தான் தொடுத்தேன் என்றால் சரிதான். AS.No.49/2015 என்ற வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. AS.No.50/2015 என்ற வழக்கு அனுமதிக்கப்பட்டது . AS.No.50/2015 என்ற வழக்கு பகுதியாகத்தான் அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான் . AS.No.50/2015 என்ற மேல்முறையீடு தொடர்புடைய தீர்ப்புரை பகுதியில் 1 ஏக்கர் 5 சென்ட் நிலம் மட்டும் தான் எனக்கு பாத்தியமானது என தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் (சாட்சி பதிலளிக்க மறுத்துவிட்டார்). என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் AS.No.50/2015 மற்றும் AS.No.49/2015 தொடர்புடைய தீர்ப்புரை என்றால் சரிதான். அந்த ஆவணம் **பி.வா.சா.ஆ.3** ஆகும்.

கணினி பட்டா 45 செண்ட் நிலம் தொடர்பாக தற்போதுவரை வாணிஸ்ரீ பெயரில் உள்ளது என்றால் சரிதான் . உரிமையாளர் என்ற அடிப்படையில்தான் வாணிஸ்ரீ 3 மற்றும் 4 வது பிரதிவாதிகளுக்கு கிரையம் முடித்துக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வாணிஸ்ரீ, 3 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் செல்லத்தக்கதல்ல என பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 3 மற்றும் 4 பிரதிவாதிகள் கிரையத் தொகையை செலுத்தாத காரணத்தால் வாணிஸ்ரீ இந்த வழக்கின் 3 மற்றும் 4 வது பிரதிவாதிகள் மீது வழக்கு தொடுத்து உச்சநீதிமன்றம் வரை சென்று அங்கு வாணிஸ்ரீ சார்பாக தீர்ப்பு வழங்கப்பட்டு இந்த தாவா சொத்து மீண்டும் வாணிஸ்ரீ உடைமைக்கும் , உரிமைக்கும் வந்துவிட்டது என்றால் சரியல்ல . உச்சநீதிமன்ற உத்தரவை வாணிஸ்ரீ பொது அறிவிப்பாக தாவா சொத்தில் நிறுவியபோது அந்த அறிவிப்பு பலகையை ஆட்களைக்கொண்டு உடைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. அறிவிப்பு பலகையை

உடைத்தது சம்பந்தமாக வாணிஸ்ரீ , என் மீது கொடைக்கானல் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து , அதன்பேரில் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டது என்றால் சரியல்ல . வாணிஸ்ரீ கொடுத்த புகாரின்பேரில் போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் என்றாலும், அதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உச்சநீதிமன்ற தீர்ப்பையும் மதிக்காமல் அவமதித்துள்ளேன் என்றால் சரியல்ல . தாவா சொத்து தொடர்புடைய 45 சென்ட் நிலம் வாணிஸ்ரீ க்கு சொந்தமான நிலம் என்பதால் நான் கோரும் பரிகாரம் எனக்குக் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் விளம்புகை பரிகாரம் கோராமல் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் உரிமையியல் வழக்கை மீண்டும் , மீண்டும் தொடுத்து 2ம் பிரதிவாதிக்கு இடையூறு ஏற்படுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. 1 ஏக்கர் 5 சென்ட் நிலத்தில்தான் நான் எனது உரிமையை வைத்துள்ளதாக ஏற்கனவே மேல்முறையீடு நீதிமன்றம் குறிப்பிட்டுள்ள நிலையில் இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல . இந்த வழக்கானது செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.03.12 18:24:59 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.